பாடம் 9

# இரண்டாவது நற்செய்தி ஊழியப்பயணம்



அந்தியோகிவிற்குத் திரும்பி வந்த பர்னபாவும் பவுலும் சபையைத் திடப்படுத்தினார்கள்; நற்செய்தி பணியைத் தொடர்ந்தார்கள். அவர்கள் சேர்ந்து செய்த கடைசிப் பணி இதுதான்; இருவருக்கும் கருத்து வேறு பாடு ஏற்பட்டு பிரிகிறார்கள். இதற்கு காரணம் பர்ன பாவின் உறவினனான மாற்கு. கொலோ 4:10. ஏற்கனவே தாங்கள் நற்செய்தியை அறிவித்திருந்த இடங்களுக்குச் சென்று பார்த்து வருவோமென பர்ன பாவை பவுல் அழைக்கிறார். ஆனால் தன் உறவின னான மாற்குவையும் கூட அழைத்துச் செல்லவேண்டு மென்று பர்னபா கூறுகிறார். ஆனால் மாற்கு ஏற்கனவே ஒருசமயம் பாதி வழியில் திரும்பியிருந்ததால், அவரை அழைத்துச் செல்லவேண்டாமென்று பவுல் கூறுகிறார். அப் 13:13.

பவுலும் பர்னபாவும் பிரிந்தது, ஆசீர்வாதமாக முடிந்தது. அவர்கள் முதலில் திட்டமிட்டிருந்ததைவிட இப்போது அதிக இடங்களில் அவர்கள் நற்செய்தியை அறிவிக்க முடிந்தது. பர்னபா தன் சொந்த இடமான சீப்புரு தீவிற்கு மாற்குவை அழைத்துச் செல்கிறார். அப் 4:36. பவுல் தன்னுடன் சீலாவை அழைத்துக் கொண்டு சீரியா, சிலிசியா பகுதிகளுக்குச் சென்று, சபைகளைத் திடப்படுத்துகிறார். பவுல் முதல்முறை யாக அந்தியோகியாவிற்கு வருவதற்கு முன்பாக பல வருடங்கள் தர்சுவில்தான் கழித்திருந்தார். அப் 9:30; 11:25,26. அங்கு அவர் ஸ்தாபித்த சபையை மீண்டும் சந்திப்பதற்கு இப்போது அவருக்கு வாய்ப்பு கிடைத் தது. ஆனால், பவுல் முதலில் நினைத்திருந்ததைவிட அவரைக்குறித்து மிகப்பெரிய திட்டத்தை தேவன் வைத்திருந்தார்.

*2018, செப்டம்பர் 1 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

**ஆகஸ்ட் 25**

**மனன வசனம்**

**இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார். அப் 18:9,10.**

**ஆராய்ச்சிக்கு**

*அப்போஸ்தலர் 16; ரோமர் 3:28; கலாத்தியர் 2:16; அப்போஸ்தலர் 17; 1கொரிந்தியர் 1:23; அப் 18:1-10.*

ஆகஸ்ட் 25 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

ஞாயிறு, ஆகஸ்ட் 26

## மீண்டும் லீஸ்திராவில்

தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் பவுல் சென்றதாக லூக்கா குறிப்பிடுகிறார்; சீரியா மற்றும் சிலிசியாபற்றிக் குறிப்பிடும்போது, அங்கு அவர் சபைகளைத் திடப்படுத்தியதாகமட்டும் கூறுகிறார். அப் 15:41.

**மற்றவர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதில் பவுல் கருத்தாக இருந்தது அவருடைய செயல்களில் எவ்வளவுக்கு வெளிப்படுகிறது? அப் 16:1–13.**

தீமோத்தேயுவின் அப்பா ஒரு புறஜாதியான்; அவருடைய அம்மா யூதக் கிறிஸ்தவள். விருத்தசேதனம் பண்ணப்படாதவராக இருந்தாலும், சிறுவயது முதலே வேத வசனங்களை தீமோத்தேயு நன்றாக அறிந்திருந்தார். 2தீமோ 3:15. எனவே, அவர் பக்திமான். ஒரு கிறிஸ்தவனாக, தன் பகுதியிலிருந்த விசுவாசிகளின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றிருந்தார்.

தகப்பனின் வம்சத்தை வைத்தல்ல, தாயாரின் வம்சத்தை வைத்துதான் யூதர்களை அடையாளங்காண்பார்கள். அதன்படி தீமோத்தேயு ஒரு யூதன். அவரது தகப்பன் கிரேக்கனானபடியால், விருத்தசேதனத்தை ஒரு காட்டுமிராண்டித்தனமான செயலாகக் கருதியிருப்பார்; அதனால் பிறந்து எட்டாவது நாளில் தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணப்படவில்லை.

தீமோத்தேயு தன்னுடன் சேர்ந்து, ஊழியம்செய்யவேண்டுமென்று பவுல் விரும்பினார்; விருத்தசேதனம் பண்ணாதவராக இருந்ததால், தீமோத்தேயுவை யூத ஜெபாலயங்களில் அனுமதிக்கமாட்டார்கள். அதனால் பவுல் அவரை விருத்தசேதனம் பண்ணுகிறார். நடைமுறை ரீதியில் சிக்கல் உண்டாகாமல் இருக்கவே பவுல் அப்படிச் செய்தார்; எனவே அவர் தான் பிரசங்கித்த நற்செய்திக்கு முரணாக நடந்துகொண்டதாகச் சொல்லமுடியாது.

முதல் நற்செய்திப் பயண இடங்களைச் சந்தித்துவிட்டு, தென்மேற்கு திசையில் பயணித்து, ஆசியாவிலிருந்த எபேசுக்குச் செல்ல பவுல் திட்டமிட்டிருக்கலாம்; ஆனால், ஆவியானவர் அங்கு போகவிடாமல் தடைபண்ணினார். பிறகு வடதிசையில் பயணித்து, பித்தினியாவுக்குச் செல்ல எத்தனித்தார்; ஆனாலும், ஏதோ சில வழிகளில் அவரை அங்குப் போகவிடாமல் ஆவியானவர் தடைசெய்தார். அந்தச் சமயத்தில் மீசியா பக்கம் வந்திருந்ததால், துறைமுகப் பகுதியான துரோவாவுக்குச் செல்வதற்கு மட்டுமே வாய்ப்பிருந்தது; அங்குச் சென்றால், கப்பல்மூலம் எந்தத் திசையில் வேண்டுமானாலும் பயணிக்கலாம்.

ஆனால் ஏஜியன் கடல் மார்க்கமாக கப்பல்மூலம் மக்கெதோனியாவுக்குச் செல்லுமாறு தேவன் இராத்தரிசனம் ஒன்றில் பவுலுக்குக் காட்டுகிறார். தன்னோடு இருந்தவர்களிடம் அத்தரிசனம் பற்றிக் கூறுகிறார்; மக்கெதோனியருக்கு நற்செய்தியை அறிவிக்க தேவன் அழைப்பதைப் புரிந்துகொள்கிறார்கள்.

தீமோத்தேயுவுக்கு பவுல் விருத்தசேதனம் பண்ணினது பற்றி யோசியுங்கள். சில விஷயங்களைச் செய்வதில் நமக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம்; அவை அவசியமற்றவையாகவும் தெரியலாம்; ஆனால் அவற்றால் பெரும் நன்மைகள் இருக்கும்; அப்படியானால் அவற்றைச் செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பதை இதிலிருந்து அறியமுடிகிறதா?

## பிலிப்பி

மக்கெதோனியாவில் இருந்தபோது, பவுலும் அவருடன் இருந்தவர்களும் பிலிப்பிக்குச் செல்கிறார்கள்; ஐரோப்பாவில் முதல் கிறிஸ்தவ சபையை அங்கு தான் ஸ்தாபித்தார்கள்.

**ஓய்வுநாளில் அந்த நற்செய்தியாளர்கள் எங்குச் சென்றார்கள்? ஏன்? அப் 16:11–24. அங்கு என்ன நிகழ்ந்தது?**

---

பவுல் எந்தப் பட்டணத்திற்குச் சென்றாலும், ஓய்வுநாளில் அங்குள்ள ஜெபாலயத்திற்குச் சென்று யூதர்களுக்கு நற்செய்தியை அறிவிப்பது வழக்கம். அப் 13:14,42,44; 17:1,2; 18:4. ஆனால் பிலிப்பியில் அவரும் அவரோடிருந்தவர்களும் ஓர் ஆற்றினருகே கூடினார்கள். தேவனைத் தொழுதுகொள்ளும்படி யூத மற்றும் புறஜாதி ஸ்திரீகளும் கூடிவந்தார்கள். ஆற்றினருகே கூடினதால், அந்தப் பட்டணத்தில் ஜெபாலயம் எதுவும் இல்லாமல் இருந்திருக்கலாம். இதிலுள்ள முக்கிய விஷயம் என்னவென்றால், ஓய்வுநாட்களில் யூத ஜெபாலயங்களுக்கு பவுல் சென்றது நற்செய்தியை அறிவிப்பதற்காக மட்டுமல்ல; ஓய்வுநாளை தொழுகையின் நாளாக அவர் கருதியதும் காரணம்.

**சிறைச்சாலைக்காரன் மனமாறின சம்பவத்தை அப் 16:25–34இல் வாசியுங்கள். அவன் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டியிருந்தது?**

நற்செய்தி என்ன சொல்கிறதோ அதையே பவுலும் சீலாவும் அந்தச் சிறைச்சாலைக்காரனிடம் சொன்னார்கள். இயேசுவை விசுவாசிப்பதால் மட்டுமே இரட்சிப்பு கிடைக்கிறது. ரோமர் 3:28; கலா 2:16. ஆனால், இயேசுவின்மேல் விசுவாசம் இருந்தால் மட்டும் போதும்; முறைப்படி கோட்பாடுகளையும் நடைமுறை ஒழுங்குகளையும் கற்றுக்கொள்ளாமலேயே ஞானஸ்நானம் எடுக்கலாம் என்று இந்தச் சம்பவத்தை வைத்து வாதிடக்கூடாது.

அந்தச் சிறைச்சாலைக்காரன்பற்றி நமக்கு என்ன தெரியும்? அவர் ஒரு யூதனா? அல்லது யூத மார்க்கத்தை தழுவியிருந்தவனா? யாராக இருந்தாலும், இயேசுவை ஆண்டவரும் இரட்சகருமாக அறிந்திருக்க வேண்டியது அவசியமாக இருந்தது. கொர்நேலியு, லீதியாள் போல ஏற்கனவே தேவனைப்பற்றி அறிந்து, அவரைத் தொழுதுகொண்ட ஒரு புறஜாதியானாக அவன் இருந்திருக்கக் கூடாதா? அப் 16:14. அப்பட்டணத்தில் பவுல் நற்செய்தியை அறிவித்த சமயத்தில் அவன் கேட்டிருக்கலாம் அல்லவா? அந்தச் சம்பவம் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது; எனவே, ஒருவரை ஆயத்தப்படுத்தாமல், ஞானஸ்நானம் கொடுப்பதற்கு இந்தச் சம்பவத்தை ஆதாரமாகக் காட்டக்கூடாது.

அப் **16:31–34** வசனங்களை வாசியுங்கள். கிறிஸ்துவின் தியாகபலி நமக்கு முற்றிலும் போதுமானதாக இருப்பதை எவ்வளவுக்குப் புரிந்துகொள்ள முடிகிறது? கிறிஸ்துவின் நீதியால் தரிக்கப்பட்டிருப்பதே நம் இரட்சிப்பிற்கான ஒரே நிச்சயமாகும்; அனுதினமும் அந்த நிச்சயம் நம்மில் காணப்பட, நாம் என்ன செய்யலாம்?

செவ்வாய், ஆகஸ்ட் 28

## தெசலோனிக்கே, பெரோயா

சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட பவுலும் சீலாவும் பிலிப்பியிலிருந்து புறப்பட்டார்கள். அப் 16:35-40. அங்கிருந்து நேராக மக்கெதோனியாவின் தலைநகரான தெசலோனிக்கேவுக்குச் சென்றார்கள்.

**தெசலோனிக்கேயிலிருந்த புறஜாதியார் பவுல் பிரசங்கித்த நற்செய்தியைக் கேட்டு, உடனே அதை ஏற்றுக்கொண்டார்கள்; அதனால் அங்கிருந்த யூதர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்கள்? அப் 17:1–9.**

இங்கும்கூட பவுல் முதலில் ஜெபாலயத்திற்குச் சென்று நற்செய்தியை அறிவிக்கிறார். பவுலின் செய்தியானது பக்தியுள்ள கிரேக்கர் அநேகரையும், கனம்பொருந்திய ஸ்திரீகள் பலரையும் தொட்டது. இவர்கள் மனமாறி 'பவுலையும் சீலாவையும் சேர்ந்துகொண்டார்கள்.' அப் 17:4. அதாவது, அவர்கள் தனியொரு குழுவாக உருவாகி, ஜெபாலயத்தில் கூடாமல், யாசோனின் வீட்டில் கூடியிருக்கலாம்.

பொறாமைகொண்ட எதிரிகள் கலகத்தைத் தூண்டினார்கள். பவுலையும் சீலாவையும் பட்டணத்து அதிகாரிகள்முன் நிறுத்தி, அவர்கள்மேல் குற்றஞ் சுமத்த வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். இதில் தீமோத்தேயுவின் பெயர் அடிபடவில்லை. பவுலும் சீலாவும் வீட்டில் இல்லாததால், யாசோனையும் புதிதாக மனமாறிய விசுவாசிகள் சிலரையும் பட்டணத்து அதிகாரிகளிடம் இழுத்துச் செல்கிறார்கள்; அரசியல் கலகக்காரர்களுக்கு வீட்டில் அடைக்கலம் கொடுத்ததாக அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

**தெசலோனிக்கேயில் இருந்தவர்களைவிட பெரோயாவில் இருந்தவர்கள் எவ்வாறு வித்தியாசமாக நடந்துகொண்டார்கள்? அப் 17:10–15.**

அப் 17:11இல் வரும் 'நற்குணசாலிகள்' என்பதற்கான கிரேக்க வார்த்தை **யூஜினேஸ்**. இதற்கு 'உயர்குடியில்' அல்லது 'உயர் அந்தஸ்தில்' பிறந்தவர் என்று அர்த்தம். பொதுவாக 'சுயநலமற்ற' மனநிலையைச் சுட்டிக்காட்டவே இந்த வார்த்தையைப் பயன்படுத்துவார்கள். அப்படித்தான் இங்கும் பயன்பட்டுள்ளது. பவுலும் சீலாவும் போதித்தவற்றை ஏற்றுக்கொண்டார்கள். அதோடு நிற்கவில்லை; அனுதினமும் வேதவாக்கியங்களை ஆராய்கிற வாஞ்சை அவர்களிடம் இருந்தது; மேலும், நற்செய்தியாளர்கள் போதிப்பது சரிதானாவென்று தினம் தினம் வேதத்தை ஆராய்ந்தார்கள். அதனால்தான் பெரோயர்கள் பாராட்டுக்குரியவர்கள். நற்செய்தியைக் கேட்டதும், அறிவுப்பூர்வமாக உணர்த்தப்படாமல், உணர்ச்சி உந்துதலுக்குமட்டும் ஆளானால், அது மேலோட்டமான மாற்றமாக இருக்கும்; சீக்கிரம் மறைந்துவிடும்.

சீக்கிரமே அங்கும் உபத்திரவம் உண்டானது; வெற்றிகரமான பவுலின் ஊழியம் பாதிக்கப்பட்டது; மேலும் தெற்குநோக்கி அத்தேனேவுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

எந்த விஷயமாக இருந்தாலும், 'காரியங்கள் இப்படியிருக்கிறதா' என்று சமீபத்தில் நீங்கள் எப்போது வேதாகமத்தைக் கருத்தோடு ஆராய்ந்து பார்த்தீர்கள்?

# அத்தேனேயில் பவுல்

பண்டைய கிரேக்கத்தின் அறிவுக்களஞ்சியமாகத் திகழ்ந்த அத்தேனே பட்டணத்தில் விக்கிரகங்கள் நிறைந்திருந்தன. சலவைக்கற்களால் செய்யப்பட்ட மனிதர்கள் மற்றும் தேவர்களின் சிலைகள் எங்கும் காணப்பட்டன. குறிப்பாக, பட்டணத்தில் மக்கள் அதிகமாகக் கூடுகிற சமுதாய மையமாகிய மேடையின் நுழைவு வாயிலில் ஏராளான சிலைகள் இருந்தன. அதைப் பார்த்து பவுல் கலங்கினார்; வழக்கமாக ஜெபாலயம் செல்கிறவர் இங்கு இருவேறு அணுகுமுறைகளைக் கையாண்டார். ஒன்று, வாரந்தோறும் ஜெபாலயத்தில் யூதரோடும், பக்தியுள்ள புறஜாதியாரோடும் சம்பாஷணை செய்தார்; இரண்டு, அனுதினமும் அந்த மேடைப்பகுதியில் கிரேக்கர்களோடு சம்பாஷணை பண்ணினார். அப் 17:15-22.

புதுப்புது விஷயங்களைக் கேட்க அத்தேனேயர்கள் விரும்புவார்கள்; பவுலின் போதனைகளைக் கேட்ட தத்துவவாதிகள் சிலர், பட்டணத்தின் உயர்மட்ட சங்கமான அரியோபாகஸ் சங்கத்தில் பேசும்படி பவுலைஅழைத்தார்கள். வேதாகமத்திலிருந்து பவுல் மேற்கோள் காட்டவில்லை; பொதுவாக யூதர்களிடம் பேசும்போது சொல்வதுபோல, இஸ்ரவேலரோடு தேவன் இடைபட்ட வரலாற்றையும் பேசவில்லை. அப் 13:16-41. ஏனென்றால், இந்த அணுகுமுறை அங்கிருந்தவர்களுக்கு ஒத்துப்போயிருக்காது. மாறாக, கலாச்சார வளர்ச்சி அடைந்திருந்த அந்தப் பிற இனத்தவருக்குப் புரியும்வகையில் சில முக்கிய வேத சத்தியங்களை அவர்களுக்குப் போதித்தார்.

**தேவன், இரட்சிப்பு, வரலாறு, மனுகுலம்பற்றிச் சொல்லி, அரியோபாகஸ் கூடத்தில் பவுல் போதித்த மாபெரும் சத்தியங்கள் யாவை? அப் 17:22–31.**

---

சொற்புரட்டரான அந்த மக்கள் தேவனையும் மார்க்கத்தையும்பற்றி தவறாகப் புரிந்துவைத்திருந்தார்கள்; அதனால் பவுலின் வார்த்தைகளை ஏளனம் செய்தார்கள். பவுல் தன் பேச்சை எவ்வாறு முடிக்க எண்ணியிருந்தாரோ தெரியவில்லை; ஏனென்றால் உலகத்தின் நியாயத்தீர்ப்புபற்றி அவர் குறிப்பிட்டதுமே அவர்கள் இடையூறு செய்தார்கள். அப் 17:31. ஏனென்றால், இரண்டு கிரேக்க கொள்கைகளுக்கு அது முரணாக இருந்தது:

1. இறைவன் அனைத்தையும் கடந்தவர், உலகத்திலும் அல்லது மனித விவகாரங்களிலும் அவர் தலையிடுவது இல்லை,
2. மரித்தபிறகு உயிர்த்தெழுதல்கிடையாது. அதனால்தான் நற்செய்தியானது கிரேக்கர்களுக்கு பைத்தியமாகத் தெரிந்தது. 1கொரி 1:23.

அதிகம்பேர் அங்கு மனமாறவில்லை. ஆனால், மனமாறியவர்கள் அங்கு செல்வாக்கு மிக்கவர்கள். அரியோபாகஸ் சங்க உறுப்பினர் தியொனீசியு; தாமரி உயர் அந்தஸ்துடையவர் என்பது அவரது பெயரில் வெளிப்படுகிறது. அப் 17:34.

சமுதாய, கலாச்சார வேறுபாடுகளை அறிந்து பவுல் செயல்பட்டார். தன் கருத்தை வலியுறுத்த அஞ்ஞானப்புலவர் ஒருவரைச் சுட்டிக்காட்டுகிறார். அப் **17:28.** வெவ்வேறு மக்களை அணுக வெவ்வேறு பாணிகளை நாம் கையாளலாம் என்பதுபற்றி இதிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?

வியாழன், ஆகஸ்ட் 30

## கொரிந்துவில் பவுல்

கொரிந்துவில் பவுலின் அனுபவம்பற்றி அப் 18:1-11 சொல்கிறது; அங்கு அவர் ஒரு வருடமும் ஆறு மாதங்களும் தங்கியிருந்தார். அங்கு ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளைச் சந்திக்கிறார்; அவர்கள் அவருடைய நீண்டநாள் நண்பர் களானார்கள். ரோமர் 16:3; 2தீமோ 4:19. யூதரனைவரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதியுராயன் போட்ட கட்டளையால், அவர்கள் கொரிந்துவுக்கு வந்திருந்தார்கள். எனவே, அவர்கள் ஏற்கனவே கிறிஸ்தவர்களாக இருந்திருக்க லாம். அச்சம்பவம் பற்றி ரோம வரலாற்றாசிரியர் ஸ்விடவ்னியஸ், 'கிறிஸ்துவின்' நாமத்தை முன்னிட்டு யூத சமுதாயத்திற்குள் உண்டான கலகத்தால் யூதர்கள் துரத்தப்பட்டார்கள்' என்கிறார். யூதர்களில் விசுவாசிகள் பிரசங்கித்த நற்செய்தி தான் அவர்களுக்குள் சலசலப்பை உண்டாக்கியிருக்கவேண்டும்; ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்கூட அங்கு நற்செய்தியை அறிவித்திருக்கலாம். அது எப்படி யிருந்தாலும், விசுவாசத்திலும், யூதப்பின்னணியிலும் மட்டுமல்ல, செய்த வேலையிலும்கூட பவுலுக்கும் அவர்களுக்கும் ஒற்றுமையிருந்தது.

**கொரிந்துவில் பவுலின் நற்செய்தி ஊழியத்தால் நிகழ்ந்தது என்ன? அப் 18:4–17.**

மக்கெதோனியா சபைகளிலிருந்து கொஞ்சம் நிதியுதவி பெற்று, சீலாவும் தீமோத்தேயுவும் கொரிந்துவுக்கு வந்திருந்தார்கள். 2கொரி 11: 8,9. அதனால் பவுல் முற்றிலும் பிரசங்கம்பண்ணுவதில் ஈடுபட முடிந்தது. தான் ஊழியம்செய் தாலும் தன் சம்பாத்தியத்தில் பிழைப்பு நடத்தவேண்டும் என்று விரும்புகிறவர் பவுல்; ஆனால், 'சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும்' என்றும் சொல்லியிருக்கிறார். 1கொரி 9:14.

பவுல் பிரசங்கித்த நற்செய்தியை யூதர்கள் பயங்கரமாக எதிர்த்தார்கள்; ஆனாலும், யூதர்கள் சிலரும் புறஜாதியாரில் தேவனைத் தொழுதுகொண்ட சில ரும் விசுவாசிகளானார்கள். ஜெபாலயத் தலைவனாகிய கிறிஸ்புவும், அவனு டைய வீட்டார் அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். கொரிந்து விலிருந்த பலர் விசுவாசிகளாகி, ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆனால் யூதர்கள் மத்தியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. அப் 18:12-17. உடனே கொரிந்துவை விட்டுக் கிளம்ப பவுல் எண்ணியிருக்கலாம். ஆனால், ஓர் இராத்திரியில் தேவன் பவுலுக்கு தரிசனமாகி, தைரியம் கொடுக்கிறார். அப் 18:9-11.

பவுல் தன்னுடன் ஆக்கில்லாவையும் பிரிஸ்கில்லாளையும் அழைத்துக் கொண்டு எபேசுவுக்குச் செல்கிறார்; அங்கு சில நாட்கள் தங்குகிறார்; பிறகு, தான் மட்டும் கிளம்பி அந்தியோகியாவை அடைகிறார். எபேசுவில் இருந்தபோது அங்கிருந்த ஜெபாலயத்தில் பிரசங்கிக்க வாய்ப்பு கிடைக்கிறது; அவருக்கு நல்ல வரவேற்பும் இருந்தது. அதனால்தான் தேவனுக்குச் சித்தமானால் தான் மீண்டும் திரும்பி வருவதாகக் கூறிவிட்டுச் சென்றார். அப் 18:18-21. அவருடைய அடுத்த நற்செய்தி பயணத்திலேயே அங்கு வருவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

கொரிந்துவிலிருந்த ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்படியாக, பவுலுக்குத் தரிசனமாகி அவரை ஆண்டவர் ஊக்கப்படுத்தவேண்டியிருந்தது. அதேபோன்ற சூழ்நிலை நமக்கும் உண்டாகும்போது, பவுலிடம் தேவன் சொன்ன வார்த்தைகள் எவ்வாறு நம்மையும் தேற்றக்கூடும்? அப் 18:10.

## வெள்ளி, ஆகஸ்ட் 31

## மேலும் படிக்க:

'இன்றும் மக்கள் விரும்பாத சத்தியங்களைப் போதிக்கும்போது, கிறிஸ்தவர்கள் என்று சொல்லுபவர்கள்கூட அதை எதிர்க்கலாம்; ஆனால் அதைரியமடையக்கூடாது; பவுலுக்கும் அவருடைய சக ஊழியர்களுக்கும் ஊழியத்தில் இதே அனுபவம் ஏற்பட்டது. சிலுவையின் தூதுவர்கள் விழிப்போடும் ஜெபத்தோடும் இருக்கவேண்டும்; விசுவாசத்தோடும் தைரியத்தோடும் தொடர்ந்து செல்லவேண்டும்; இயேசுவின் நாமத்தினால் எப்போதும் ஊழியம்செய்யவேண்டும்.' - *AA, p 230.*

'பூலோக வரலாற்றின் இறுதிக் கட்டங்களில், துருவி ஆராய்கிற சத்தியங்கள் யாருக்கு அறிவிக்கப்படுகின்றவோ அவர்கள் பெரோயர்கள்போல, அறிவிக்கப்பட்ட தேவ வார்த்தையை வேதவாக்கியங்களோடு அனுதினமும் ஒப்பிட்டுப் பார்த்தால், இன்று ஒரு சிலரே தேவ கட்டளையின் நியதிகளுக்கு உண்மையாக இருக்கிற இடத்தில் ஏராளமானவர்கள் உண்மையாக இருப்பார்கள்.

'ஒவ்வொருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இரட்சிப்பின் செய்தியை அறிவிக்க தேவன் தம் தூதுவர்களை அனுப்புகிறார்; கேட்டவர்கள் தம் ஊழியக்காரர்களின் வார்த்தைகளின்படி எவ்வளவுக்கு நடந்தார்கள் என்று கணக்குக் கேட்பார். சத்தியத்தை அறிய மெய்மனதுடன் நாடுகிறவர்கள், சொல்லப்படுகிற உபதேசங்களை தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் கவனமாக ஆராயவேண்டும்.' - *AA, p* 232.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *திங்கட்கிழமை பாடத்தின் கடைசியை பத்தியை வாசித்து, பின்வரும் மேற்கோளின் அர்த்தத்தை வகுப்பில் கலந்தாலோசியுங்கள்: 'ஞானஸ்நானம் பெறுகிற நபர்கள் அதற்காக முழுதளவில் தங்களை ஆயத்தப்படுத்தவேண்டும். சத்தியத்தை புதிதாக அறிந்துகொண்டவர்களுக்கு கிறிஸ்தவ வாழ்க்கையின் நியதிகளை தெள்ளத் தெளிவாக அறிவிக்கவேண்டும்.' - 6T, p 91,92.*

2. *புதன்கிழமை பாடத்தின் கடைசி கேள்வியைத் தியானியுங்கள். நற்செய்திக்கும் நம் சபையின் நம்பிக்கைக்கும் களங்கம் உண்டாகாமல், கலாச்சார வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு, அதே ஆர்வத்துடன் மக்களைச் சந்திக்க நாம் என்ன செய்யலாம்?*

3. *அத்தேனேயில் மக்கள் மூன்று விதமாக நடந்துகொண் டார்கள். அப் 17:32-34.*

   *1) சிலர் கேலிசெய்தார்கள். பவுலின் வைராக்கியம் அவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. விளையாட்டாக எண்ணினால், விபரீதமாக முடிந்துவிடும்.*

   *2) சிலர் தீர்மானம் செய்யத் தயங்கினார்கள். நாளைக்கு என்று பேசப் பழகும் போதுதான், வாழ்க்கையிலேயே ஆபத்தான கட்டம் தொடங்குகிறது.*

   *3) சிலர் விசுவாசித்தார் கள். 'தேவனுடைய அருளைப் புறக்கணிப்பவன் முட்டாள் என்பது ஞானமுள்ளவனுக்குத் தெரியும்.' - வில்லியம் பார்க்லே.*

4. *அத்தேனேயர்களுக்கு தன் கருத்தை உணர்த்த அஞ்ஞான எழுத்தாளர் ஒருவர்பற்றி பவுல் குறிப்பிட்டார். அப் 17:28. இதுபோன்ற எடுத்துக்காட்டுகளால் சிலசமயங்களில் பயனுண்டு என்பதை அறியமுடிகிறதா? இதில் என்ன ஆபத்தும் உண்டு?*